1996 பிப்ரவரி 22]

தொடர்பு இல்லாத கேள்வியாக இருந்தாலும் அவர் கேட்டிருக்கிற கேள்வியைப் பொறுத்தவரையில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியத்திலே இருக்கிற பகுதிகள் 3 தொகுதிகளுக்கு உட்பட்டு வருகிறது ஆகவே ஒவ்வொரு தொகுதிக்கும் ஏற்றவாறு சரி செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரையில் நிதித் துறையில் இந்தக் கேள்வியை எழுப்பவேண்டும். இரண்டாவது அன்றைக்கு தொகுதிகள் பிரிக்கப் படுகிறபோது இவ்வாறு பிரிக்கப்பட்டு ஏற்கெனவே அந்த அமைப்புகள் உருவாகியிருக்கின்றன. அன்றைக்கு அந்தச் சூழ்நிலையில் இந்த டீ-லிமிடேஷன் கமிட்டி என்ற ஒன்று இந்தத் தொகுதிகளைப் பிரிப்பதற்கு இருந்திருக்கிறது. அதிலே அன்றைக்கு எடுத்துச் சொல்லி அதை சரி செய்து இருக்கலாம். ஆனால் இன்றைக்கும் இந்த கமிட்டி அமலில் இருக்கிறபோது இந்தக் கோரிக்கையை அந்தக் கமிட்டியில் எடுத்துச் சொன்னால் அதை மாற்றி அமைக்கிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 95, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக டாக்டர் பெ. வீரபாண்டியன் கேட்க விரும்புகிறார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

95—

ஆரணிக்கு குடிநீர்த் திட்டம்

***36234**—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க பாலாற்றிலிருந்து ஆரணிக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது பாலாற்றில் நீர் ஆதாரம் தேடும் பணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்யப்பட்டு வருகிறது.

[1996 பிப்ரவரி 22

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஆரணி ஒரு பெரிய நகரம் ஆகும். பக்கத்தில் செய்யாறும் மறு பக்கத்தில் பாலாறும் செல்கின்றன. இந்தத் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எந்தக் காலக் கட்டத்தில் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தி குடிநீர் பிரச்சினை ஆரணியில் தீர்க்கப்படும் எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி நகரில் உள்ள குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்தால் நீர் ஆதாரம் தேடுகிற பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன். இந்த நகருக்கு தற்சமயம் குடிநீரானது சுமண்டல நாகநதி மற்றும் செய்யார் ஆகிய இடங்களில் இருந்து அமைக்கப்பட்டுள்ள தலைமைப் பணி இடங்களிலிருந்து பெறப்பட்டு ஏற்கெனவே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் இன்றைக்கு அபிவிருத்தி திட்டத்திற்காக...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: நகராட்சியினுடைய கோரிக்கையின்படி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகளுக்கான மதிப்பீடு ரூபாய் 8.44 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வடக்கு மண்டலம், வேலூர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த ஆய்வு மதிப்பீட்டு தொகை முழுமையும் நகராட்சி அரசு சுழற்சி நிதியிலிருந்து செலுத்தப்பட்டு இருக்கிறது. இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான நீராதாரம் வேண்டி நிலநீர் ஆய்வுப் பணிகள் பாலாற்றில் ஆற்காடு அருகில் முப்பதுவெட்டி என்ற இடத்தில் நடைபெற்றன. இந்த இடத்தில் தகுந்த நீராதாரம் கிடைக்காத காரணத்தாலும் மேலும் காஞ்சீபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் தலைமைப் பணியிடம் இந்த இடத்தின் அருகில் அமைவதாலும் பாலாற்றில் கலவை குடிநீர் திட்டத் தலைமைப் பணியிடத்திற்கும் பாலாறு அணைக்கட்டிற்கும் இடைப்பட்ட வெளியில் நீராதாரம் கண்டுபிடிப்பதற்காக வாரிய முதுநிலை நிலநீர் ஆய்வாளரின் ஆலோசனையின்படி மீண்டும் நிலநீர் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுப் பணிகள் முடிவடைந்தபின் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்.96, டாக்டர் எஸ்.சுந்தரராஜ். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

96—

புத்தகங்கள் வெளியிட கடன் வழங்குதல்

37835—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்கு தாட்கோ மூலம் கடன் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆதிதிராவிடர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் புத்தகங்கள் வெளியிடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆதிதிராவிட மக்களுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு காலக்கெடு நிர்ணயித்து அந்தக் காலக்கெடுவிற்குள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்கு நிதியுதவி வழங்கி ஆதிதிராவிட மக்களுடைய இரட்சகராகத் திகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்த ஆதிதிராவிட மக்கள் குறிப்பாக கிராமப் பகுதிகளில் பல்வேறு பகுதிகளில் இருந்தாலும், அவர்கள் பொருளாதார வசதி இல்லாததன் காரணமாக, நாட்டுப்புறப் பாடல்களில் அவர்கள் தலைசிறந்து விளங்கினாலும், பல்வேறு சிறப்பு வாய்ந்த புத்தகங்களை எழுதுவதற்கு அவர்களுக்குத் திறமை இருந்தும், பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் இன்றையதினம் அவைகளெல்லாம் தடைபட்டு இருக்கின்றன. இன்றையதினம் பல யுத்திகளைக் கையாண்டு அந்த ஆதிதிராவிட மக்களையும் தொழில் துறையில் தலைவர்களாக்கி, இன்றையதினம்